2012 ஏப்ரல் 10]

கேட்டுக்கொண்டதன்படி அந்தச் சாலைகள் அமைக்கும் பணியை விரைவில் அரசு தொடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

நியாய விலைக் கடை

***454—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, இருத்துக்கோட்டை ஊராட்சி, தோட்டிகுப்பம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, இருத்துக்கோட்டை ஊராட்சி, தோட்டிகுப்பம் கிராமம் மற்றும் அதன் அருகில் உள்ள அர்த்தகூர், வள்ளிபுரம் மற்றும் பென்னாங்கூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 130 குடும்ப அட்டைதாரர்களுக்கு தோட்டிகுப்பம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதிக்குட்பட்ட தோட்டிகுப்பம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஐந்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் ரேஷன்*

பொருட்களைப் பெற வேண்டுமென்றால் ஐந்து கிலோ மீட்டர் தூரம் உள்ள இருத்துக்கோட்டை நடந்து வந்துதான் பெற வேண்டியிருக்கின்றது. ஆகவே, தோட்டிகுப்பம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க வேண்டுமென்றால் எத்தனை குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், எத்தனை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், ஏற்கெனவே இது குறித்து, ஒரு கடையைத் திறப்பதற்கு உண்டான norms பற்றி விவரமாக எல்லாவற்றையும் அமைச்சர் சொல்லி விட்டார். மறுபடியும் அதையே கேட்டு, சபையின் நேரத்தை வீணாக்காதீர்கள். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறைக்குச் சென்று அந்த விவரத்தைப் பெற்று கொள்ளுங்கள். அடுத்து, திரு. பாஸ்கர். (குறுக்கீடு) திரு. டி. இராமச்சந்திரன், நீங்கள்தான் நன்றி சொல்லி விட்டீர்களே, தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி நீங்கள் எழுந்திருக்ககூடாது, தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பாஸ்கர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டுக்கும் மேற்பட்ட பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு விதிகளில் வாய்ப்பு இல்லையென்று சொல்லப்படுகிறது. ஆகவே, இரண்டுக்கும் மேற்பட்ட பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாய்க் கடையிலிருந்து இரண்டு பகுதிநேர அங்காடிகள்தான் திறக்க முடியும், இரண்டு கடைகளுக்கு மேல் திறக்க முடியாது என்பது அரசின் விதி என்பதனையும், இரண்டுக்கு மேல் திறக்க வேண்டிய அவசியம்

2012 ஏப்ரல் 10]

ஏற்பட்டால் ஒரு கடையை இன்னொரு தாய்க் கடையாக மாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்குரிய குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இது எந்த இடத்தில் அப்படித் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஏலகிரியான்கோட்டையில் ரேஷன் கடை உள்ளது. அந்தப் பகுதியில் உள்ள ஜீவா நகர் பகுதியில் நான்குவழிச் சாலையைக் கடக்க வேண்டியுள்ளதால், அந்த ஜீவா நகருக்கு பகுதிநேரக் கடை வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் தன்னுடைய துணைக் கேள்வியின்போது நன்றியைக் கூறியதற்குப் பின்னால் ஒரு வினாவை எழுப்பினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் அதற்கும் பதில் சொல்லலாம் என்றிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்லுங்கள். உறுப்பினர், நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், திரும்ப அதே கேள்வியைக் கேட்காதீர்கள்.

[2012 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிநேரக் கடை தொடங்க வேண்டுமென்று சொன்னால், பிரித்ததற்குப் பின்னால் 500 கார்டுகள் தாய்க் கடையில் இருக்க வேண்டும். அதாவது பிரிக்கப்பட்டதற்குப் பின்னாலேயும் 500 அட்டைகள் இருக்க வேண்டும், இடையே 1.5 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கடையானது மலைப் பகுதியிலே இருக்கிறது. அவர் குறிப்பிடுகின்ற கடையில் இந்த விதி முழுமையாக முற்றுப்பெறவில்லை, விதியின்படி இல்லையென்று சொன்னாலும், அது மலைப் பகுதியிலே இருக்கிறது. யானைகள் நடமாட்டம் இருக்கிறது, 4 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது என்பதனாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்ப்பவர்களை எல்லாம் இருக்கும் இடம் இல்லாமல் செய்திட்ட தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவி, முத்தமிழ் வித்தகர், பன்மொழிப் புலவர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து பணிவோடு வணங்குகிறேன்.*

என்னுடைய வாணியம்பாடி தொகுதியில் வள்ளிப்பட்டு, கிரிசமுத்திரம், 102. ரெட்டியூர், மரிமாணிகுப்பம், இருணாபட்டு, பெருமாப்பட்டு ஆகிய 6 தாய்க் கடைகளில் இருந்து பகுதிநேர கடைகளாக விஜிலாபுரம், பாப்பானேரி, ராணிப்பேட்டை, ஆண்டல்வாடிநத்தம், திரு.வி.க. நகர், ஜெலகாம்பாறை ஆகிய இடங்களில் பகுதிநேரக் கடைகள் திறக்க கடந்த 6 மாதங்களுக்கு முன்பே கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக பலமுறை அரசு அதிகாரிகளிடத்திலே கோரிக்கை வைத்தும் இன்றுவரையில் கடைகள் திறக்கப்படாமல் உள்ளன. வாணியம்பாடி தொகுதியைப் பொறுத்தவரையிலே மலைப் பகுதியாக இருப்பதால் 3, 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பொருட்களை வாங்க வேண்டிய

2012 ஏப்ரல் 10]

சூழ்நிலை உள்ளதால் உடனடியாக அமைச்சர் அவர்கள் கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு முன்னாலே என்னிடத்திலே இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள பொது மக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அது பரிசீலனையில் உள்ளது. பரிசீலனைக்குப் பின்னால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆவன செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட கோனேரிப்பட்டி ஊராட்சியில் ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. 500–க்கும் மேற்பட்ட கார்டுகள் உள்ளன. அங்கே சொந்தக் கட்டடம் இல்லாததால் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. அங்கே வாடகைக்குக் கட்டடத்தைக் கொடுத்தவர்கள், நீங்கள் கடையை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யுங்கள், எங்கள் இடத்தை விட்டுவிடுங்கள் என்று சொல்கிறார்கள். மக்கள் எல்லோரும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்னாலும், அந்தக் கடைக்குப் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு

உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்கினால் நிச்சயமாக கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மைக்கினை சிறிது உயர்த்திக் கொடுக்கவும்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, அறந்தாங்கி தொகுதி, தொண்டைமானந்தல், சுப்ரமணியபுரம், கோபாலப்பட்டிணம், கம்பங்காடு, கடவாக்கோட்டை போன்ற கிராமங்களில் அரசு விதிகளுக்குட்பட்டு 500 கார்டுகளுக்கு மேல் அதிகமாக உள்ளதால் அதை பகுதிநேர அங்காடியாக பிரித்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலினை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துருவினைப் பெற்று நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, சித்தேரிமலையில் இருக்கக்கூடிய மண்ணூர் கிராமத்தில் 175 கார்டுகள் உள்ளன. கடையைப் பிரிப்பதற்கு அரசு அதிகாரிகள் தயாராக இருக்கிறார்கள். இரண்டு கடைகளைப் பிரித்த பிறகும் அங்கு தாய்க் கடையில் 750 கார்டுகள் இருக்கின்றன. மூன்றாவது கடையைப் பிரிப்பதற்கு அரசு விதி இடம் தரவில்லை என்பதால் ஆவாரங்காட்டூர், சோலைகொட்டாய், வாதப்பட்டி, காரப்பாடி ஆகிய 5, 6 கடைகள்*

2012 ஏப்ரல் 10]

6, 7, 8 மாத காலமாக திறக்கப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, தாய்க் கடையில் 750 கார்டுகள் இருக்கும் பட்சத்தில் 2 பகுதிநேரக் கடைகளுக்கு மேலாக மூன்றாவது கடையைப் பிரிப்பதற்கு வாய்ப்புகள் இருந்தும் அரசு விதி இடம் கொடுக்கவில்லை என்று சொல்கின்றபட்சத்தில் அத்தகைய விதியினைத் தளர்த்தி தாய்க் கடையில் 500 கார்டுகளுக்கு மேல் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு அங்கு மேலும் ஒரு பகுதிநேரக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தாய்க் கடைகளிலிருந்து அதிகமாக பகுதிநேரக் கடைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது என்னிடத்தில் தருமபுரி மாவட்ட விவரங்கள் இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டம் குறித்த விவரங்கள் உள்ளன. அங்கு 484 முழுநேரக் கடைகள் உள்ளன. 413 பகுதிநேரக் கடைகள் உள்ளன. தாய்க் கடைக்கு நிகராக பகுதிநேரக் கடைகளும் உள்ளன. அந்தப் பகுதி மலைப் பகுதி என்பதனால் அதிகமாக பிரிக்கப்பட்டுள்ளது. மலைப் பகுதி என்பதனால், தாய்க் கடையில் 400 கார்டுகளுக்கு மேல் இருந்தால் போதும். மேலும் 100 குடும்ப அட்டைகள் இருந்தால் பகுதிநேரக் கடைகள் பிரிப்பதற்கு மலைப் பகுதிக்குப் போதுமானது ஆகும். மேலும் 1 கி.மீ. தூரம் இடைவெளி இருந்தால்கூட மலைப் பகுதிக்குப் போதுமானது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்றாவது கடை பிரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதற்கு விதி இடம் கொடுக்கவில்லை என்பதனால், இந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கப்பியறை பேரூராட்சி, கோபுரவிளையிலும், ரீத்தாபுரம் பேரூராட்சியில் பிரண்ட்ஸ் காலனியிலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றிருந்தால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

கிரானைட் வளாகம்

***2715—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி பகுதியில் கிரானைட் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கனிம நிறுவனம், சென்னை மணலியில் கிரானைட் தொழிற்சாலை ஒன்றினையும், கிருஷ்ணகிரி மாவட்டம், மாதேபள்ளியில் ஒரு கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையினையும் நடத்தி வருகின்றது.